## மணிப்பூர் பா.ஜ.க. முதல்வர் கடமையை செய்யத் தவறிவிட்டார்!

# மனிதத் தன்மையை துடைத்துவிட்ட ஒரே கட்சி பா.ஜ.க.!

## 'சன்நியூஸ்' கேள்விக் களம் விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் பி.ஏ.கிருஷ்ணன் வாதம்!

**சென்னை, ஜூலை 27 -**

**'சன் நியூஸ்' தொலைக்காட்சியில் நேற்று முந்தினம் (25.7.2023) இரவு நடைபெற்ற "கேள்விக் களம்" விவாத நிகழ்ச்சியில் எழுத்தாளரும், மூத்த பத்திரிகையாளரு மான பி.ஏ.கிருஷ்ணன் எடுத்துரைத்த வாதங்கள் வருமாறு:**

பா.ஜ.க. எல்லாவற்றையுமே தங்களுடைய தேர்தலில் எப்படி வெற்றி பெறவேண்டும் என்ற அணுகு முறையைத்தான் கையாளுகிறது.

எந்தக் கோணத்தில் எடுத்துக்கொண்டாலும், அதற்கும், தேர்தலுக்கும் ஒரு கோடு போட்டு, அந்தக் கோடு தேர்தலை நோக்கிச் செல்லுமா? என்ற ஒரு குறிக்கோள் நோக்கில்தான் பா.ஜ.க. எப்பொழுதுமே தன்னுடைய வழிமுறைகளை அமைத்துக் கொள்கிறது.

இன்றைக்கு மனிதத்தன்மையற்ற ஒரு செயல் நடந்து கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

மணிப்பூரில் நடந்தது நம்முடைய கண்ணுக் கெதிராக ஓர் இடம் பற்றி எரியும்பொழுது, அதை அணைக்காமல். கடந்த ஆண்டு நடந்ததைப்பற்றி விசாரித்தால் அது சரிப்பட்டு வராது. எந்த ஒரு லாஜிக்கும் அதில் இல்லை.

ராஜதர்மம் என்று சொல்வார்களே, அந்த ராஜதர்மத்திற்கும், ஒன்றிய அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுதான் என்னுடைய முதல் கட்டப் பார்வை.

எல்லாவற்றையும் தேர்தல் கண்ணோட்டத்தோடு தான் அணுகுகிறார்கள்; மனிதத் தன்மை என்பதை அறவே துடைத்துவிட்டு இருக்கும் ஒரு கட்சி என்றால், அது பாரதீய ஜனதா கட்சிதான் என்று நான் மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஏனென்றால், பிரதமருக்கென்று உலகம் முழுவதும் அவருக்கு ஒரு மதிப்பு இருக்கிறது; இந்திய மக்களிடமும் அவருக்கு மதிப்பு இருக்கிறது; மணிப்பூரிலும் அவருக்கு மதிப்பு இருக்கிறது.

மணிப்பூரில் குக்கி இனத்திலும் எம்.பி. இருக்கிறார்கள்; நாகா இனத்திலும் எம்.பி., இருக்கிறார்கள்.

மணிப்பூருக்கு அவர் ஒரு வாரத்திற்கு முன் சென்றிருந்தால், நிலைமை வேறு மாதிரியாக



இருந்திருக்கும். மக்களுக்கு வேறொரு செய்தியைக் கொடுத்திருப்பார். ஆனால், அவர் அதைக் கொடுக்க விரும்ப வில்லை என்றுதான் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்னொன்று, இன்று வரையிலும், பிரதமர் மணிப்பூரில் நடந்த பாலியல் வன்முறையைப் பற்றி பேசியிருக்கிறாரே தவிர, அங்கே நடைபெறும் இனக்கலவரத்தைப்பற்றி பேசவில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்றுவரை பிரதமர் அதுகுறித்துப் பேசவில்லை; மவுனமாகத்தான் இருக்கிறார். அவர் அதை ஆதரிக்கிறாரா? அல்லது எதிர்க்கிறாரா? என்பதைப்பற்றி அவர் ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

மற்றவர்கள் பேசுகிறார்களே தவிர, அவர் அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை.

பாலியல் வன்முறையைப்பற்றி அவர் பேசியது கூட, அங்கே நடைபெறும் இனக்கலவரத்தை திசை திருப்பும் வேலைதான் என்று நான் நினைக்கிறேன்.

மணிப்பூரில் என்ன நடக்கிறதோ, எல்லாவற்றையும் விவாதிக்க வேண்டும்.

மணிப்பூரில் என்ன நடக்கிறது? என்று நீங்கள் கேட்டீர்கள்,

வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறும் உரசல்களை விளக்குவது என்பது மிகமிகக் கடினம்.

மணிப்பூரை எடுத்துக்கொண்டால், மைதேயி, நாகா, குக்கி இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

மணிப்பூரில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து பலரிடம் பேசியிருக்கிறேன். அங்கே நடப்பது மத சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல; இனப் பிரச்சினைதான். இது பல ஆண்டுகளாக நீறுபூத்த நெருப்பாக இருந்து இப்பொழுது வெடித்திருக்கிறது என்கிறார்கள்.

ஒரு நண்பர் சொன்னார். மைதேயி சர்ச்சுகளை குக்கி இன மக்கள் கைப்பற்றியிருக்கிறார்கள் என்று.

இரண்டாவது, இந்தியாவில் மணிப்பூரில் உள்ள மக்கள் தொகையின் சதவிகிதம் 0.2 இருந்தாலே அதிசயம். ஆனால், மணிப்பூரில் 8 சதவிகிதம் எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கிறார்கள். அதற்குக் காரணம், போதைப் பொருள்களுக்குப் பலர் அடிமைகளாக இருக்கிறார்கள்.

இரண்டாவது மணிப்பூர் முழுவதும் துப்பாக்கி களால் நிரம்பியிருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடக்காத விஷயங்கள் மணிப்பூரில் நடைபெறுகிறது.

வன்முறைகள் நடக்க மணிப்பூரில் வாய்ப்பு இருக்கிறது என்று நமக்குத் தெரியும். இவை எல்லாவற்றையும் ஒன்றிய அரசு, நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்.

ஒன்றிய அரசின் நடவடிக்கை சரியில்லை; நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

மணிப்பூர் முதலமைச்சர் தன்னுடைய பதவியிலிருந்து விலகவேண்டும் என்பதில் எந்த வித அய்யமுமில்லை. அவர் முற்றிலும் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டார்.

அவர் தொடக்கத்திலிருந்தே மைதேயி இனத்திற்கு ஆதரவாகத்தான் நடந்துகொண்டி ருக்கிறார்.

அவர் கட்சியில், 7 குக்கி இன எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள்; 8 நாகா இன எம்.எல்.ஏ.,க்கள் இருக்கிறார்கள். இவர்கள் இல்லையென்றால், மணிப்பூர் அரசே நடக்காது.

அப்படியிருந்தும், முதலமைச்சர் மைதேயி இனத்திற்கு ஆதரவாகச் செயல்படுகிறார்.

பாரதீய ஜனதா கட்சி இப்பிரச்சினையை எப்படிப் பார்க்கிறது என்றால், இந்துக்கள் என்பதினால் மைதேயி இன மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறது.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நேற்று (26.07.2023 ) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி. ஆர்.பிரியா, மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் ஷேக் அப்துல் ரகுமான், மற்றும் தலைமைப் பொறியாளர்கள், மண்டல அலுவலர், செயற் பொறியாளர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சா. இராமமூர்த்தி
### ஜூலை 27 (2013)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

புழல் எம். நாராயணன் முன்னிலையில்

கே. அங்குசாமி தலைமையில்

# மாதவரம் 15வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## 11 இடங்களில் கழக கொடி ஏற்றி

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. இனிப்பு வழங்கினார்

*சென்னை, ஜூலை 27-*

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்,கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஊர் தோறும் திமுக என்கின்ற தலைப்பில் பழைய கொடிக் கம்பங்களை புதுப்பித்தல் புதிய கொடிக்கம்பங்கள் நடப்பட்டு கழகக் கொடி ஏற்றுதல் என்று நிகழ்ச்சிகள் வட்டங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன

அந்த வகையில் மாதவர் வடக்கு பகுதி 15 ஆவது வட்டத்தில் கழக கொடி ஏற்றிய நிகழ்ச்சி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்றது

பதினைந்தாவது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர் நந்தினி சண்முகம் ,பி.டி. ரவிச்சந்திரன், கே செல்வன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் வசிம்முகமது தங்கராஜ், இ. எம். மனோகரன், என். ராஜேந்திரன், கண்ணன்,எல்ல முத்து, கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்றனர்

மணலி புதுநகர் கிளைக் கழக அலுவலகம்,பி.டி. ரவிச்சந்திரன் இல்லம், ஸ்டேட் பாங்க் பிரதான சாலை, பழைய நாபாபாளையம் பேருந்து நிறுத்தம், வட்டச் செயலாளர் அங்குசாமி இல்லம், டிரைவே கம்பெனி அருகில்,பழைய நாபாளையம் பேருந்து நிறுத்தம், பழைய நா பாளையம் டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில்,வசீம் முகமது இல்லம், மணலி புதுநகர் பால் பூத், மணலி புது நகர் காவல் நிலையம் எதிரே ஆக 11 இடங்களில் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்பட்டது

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கினார்

நூற்றுக்கணக்கான கழகத்தினர் இருசக்கர வாகனங்களில் இரு வண்ணக் கொடியேந்தி ஊர்வலமாக சென்று கழகக் கொடி ஏற்றி வைக்கும் நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்


இந்த நிகழ்ச்சிகளில் ஏசுராஜ், முருகன், டில்லி, பாஸ்கர், குணா, அறச்செல்வி விவேக், விஜி,பத்மநாபன், நாகராஜ்,ஹரி, சரவணன், சபரீசன், நிஷா,சாய் பாரத், மோனிஷா, வெங்கட், ஹரிஷ், விமல், பி.டி. தேவேந்திரன், விக்கி, அண்ணாமலை, ஜெயா, பிரகாஷ், சசி, சுதாகர், அஜித், துளசிராமன், டென்னிஸ், நேசரவி

பதினாறாவது வட்டம் எலந்தனூர் வி சிவப்பிரகாஷ், பர்மா நகர் தினேஷ் சங்கர், சரவணன்,வட பெரும்பாக்கம் சண்முகசுரேஷ் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

*19, 23, 23, 16 வட்டங்களைத் தொடர்ந்து 15வது வட்டத்தில் ஊர்தோறும் திமுக என்கின்ற கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சியை மிகச்சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து செயல்படுத்திய, 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி அவர்களுக்கு, மாதவரம் வழக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேட்டி அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.*

சங்கத் தமிழ் வளர்த்த

# கவிமணி தேசிக விநாயகம் 148வது பிறந்த நாள் இன்று!



தமிழறிஞர் " கவிமணி" தேசிக விநாயகம் அவர்கள் 1876 ஆண்டு ஜூலை திங்கள் 27 ஆம் நாள் நாகர்கோயில் அருகிலுள்ள தேரூர் கிராமத் தில் சிவ தாணு ஆதி லட்சுமிக்கு பிறந்தார்.

இளம் வயதில் தமிழறிஞர் சாந்தலிங்கம் தம்பிரான் அவர்களிடம் தமிழ் பயின்றதோடு, தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

"உள்ளத்து உள்ளது கவிதை
இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த
தமிழில் - உண்மை
தெளிந்து உரைப்பது கவிதை" …

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்தவர் கவிமணி ஆவார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் 29.12.1940 ஆன்று நடைபெற்ற சென்னை மாநில ஏழாம் தமிழ்ச் சங்க மாநாட்டில் தமிழறிஞர் உமாமகேஸ்வரனார் அவர்கள், கவிஞர் தேசிக வினாயகம் அவர்களுக்கு " கவிமணி " என்ற பட்டத்தினை வழங்கி புகழ்ந்துரைத்தார்கள்.

கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் எழுதிய குழந்தைக் கவிதைகள் புகழ் பெற்றவை. கவிமணி அவர்கள், குழந்தை துயில் எழுவதை பாடும் பாங்கினைப் பாரீர்!

அருணன் உதித்தனன்;
அம்புசம் விண்டது
சூரியன் உதித்ததும்
தாமரை மலர்ந்தது.
…என்று வருணிக்கும் அழகே அழகு.
அதுமட்டுமல்ல..

முல்லை நறு மலரோ !
முருகவிழ்க்கும்
தாமரையோ !
உள்ளம் குளிர
உரையாடும்
பைங்கிளியோ !
தேவாரப் பாட்டும்
திருவாசகத் தேனும்
நாவார உண்ண
பிறந்த நன்மகளோ !
.. என்கிறார் கவிமணியார்.

இறைவன் கோயிலில் இல்லை; உள்ளத்தில்
உள்ளான் என்கிறார்…
" கோயில் முழுதும்
கண்டேன் உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்;
தேவாதி தேவனை
யான் தோழி !
எங்கு தேடியும் கண்டிலேன்..
…என்று பாடியவர் கவிமணியாவார்.

" இந்தியாவில் சாதிப்பிரிவுகள்
ஒரு சாபம் என்று
வேதனையுற்று,

" பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் "
..என்ற அய்யன் திருவள்ளுவரின்
உயர்மொழியினை ஏற்று,

மக்கள் உடம்பில் ஓடும்
குருதியிலோ
விழிகளில் வழியும்
கண்ணீரிலோ
தேடிப் பார்த்தாலும் சாதி
ஒன்றும் தெரிவதே இல்லை
அனைவரிடை உடம்பில்
ஓடும் குறுதி சிகப்பு நிறமே !
அனைவரின் கண்ணீரும்
உப்புத் தன்மையே !

இவ்வுலகில் பிறக்கும்போதே
" நெற்றியில் திருநீற்றையும்
மார்பில் பூணூலையும்
அணிந்து கொண்டு
யாரேனும் பிறந்ததுண்டா ?"

என்று உணர்ச்சி ததும்ப கேள்வி கேட்ட கவிமணி அவர்கள், மேற்குலத்தார் யார் என்பதை விளக்குகிறார்…

பிறப்பினால் எவருக்கும் பெருமை வராது; சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும்; நன்மை செய்பவரே உலகமே நாடும் மேற்குலத்தார் ஆவார்!

அகிம்சை விருத்தம், ஆசிய ஜோதி , மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம் உரை, மணிகள் பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் அவர்களின் கவிதைகள் போன்றவை கவிமணி அவர்கள் படைத்த சிறந்த நூல்களில் சிலவாகும்.

கவிமணி அவர்கள் பட்டப் படிப்பினை ஆசிரியர் பயிற்சியினையும் முடித்து, தான் பயின்ற தேரூர் பள்ளியில் ஆசிரியராகவும், திருவனந்தபுரம் மகளிர் கல்லூரி பேராசிரியராகவும் திறம்பட பணியாற்றியவர்.

அன்றைய சென்னை மாகாண அரசு, கவிமணி தேசிக விநாயகம் அவர்களுக்கு "அரசவைக் கவிஞர் "பொறுப்பினை வழங்க தேர்வு செய்த போது, அரசவைக் கவிஞர் பொறுப்பிற்கு தகுதியானவர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் அவர்களே மிகவும் பொருத்தமானவர் என்பதால் அவருக்கே "அரசவைக் கவிஞர் பதவியினை வழங்க வேண்டும்" என்ற பெருந்தகையாளர் கவிமணி ஆவார்.

இந்தியாவில் உள்ள மாநிலங்கள், மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப் பட வேண்டும் என்ற கிளர்ச்சியில் பெரும் பங்கேற்றார்.

1950 ஆண்டு கன்னியாகுமரி எல்லைப் போராட்ட மாநாட்டில் கவிமணி அவர்கள் எழுச்சியுரை ஆற்றியவர்.

தமிழறிஞர் கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் தனது 79 ஆவது வயதில் 1954 டிசம்பர் 26ல் இயற்கை எய்தினார்கள்.

அவர் வாழ்ந்த தேரூர் இல்லம் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.

கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் கவிதைகள் அனைத்தையும் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையினர்களுக்கு ரூ.15 இலட்சம் வழங்கி பெருமை சேர்த்தார்கள்.

கவிமணி அவர்களின் அஞ்சல் தலையினை ஒன்றிய அரசு 2005 ஆண்டு வெளியிட்டு பெருமைப் படுத்தியது.

" சந்தத் தமிழ் வளர்ப்போம்;
தாய் நாட்டுக்கு
உழைப்போம்;
சிந்தை மகிழ்ந்து தினம்"

என்று பாடிய " கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் புகழ் தமிழர்களின் ஊள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்கும்.

**க.வை. இராமகிருட்டினன்**
செயலர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம்
மதுரை



நீலகிரி மாவட்டத்தின் கடைக்கோடி பகுதியான, கீழ் கோத்தகிரி, அரக்கோடு ஊராட்சி, வக்கனமரா மற்றும் பங்களா படுகை இருளர் பழங்குடியினர் மக்களைச் சந்தித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மக்களின் கோரிக்களை கேட்டறிந்து மேலும் அங்கு நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்தார்.